**கொடக்கவெல பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொடக்கவெல பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும்எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் கொடக்கவெல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம்முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆண்டின் முத்திரை கட்டண குறை பில்லிடல் ரூபா 7,253,930 தொகைக்கான செம்மையாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டில் இறுதி கணக்கு தயாரிக்கும் போது சரி செய்வதாக. | மிகை அல்லது குறை ஒதுக்கீட்டிற்காக காலரீதியாக செம்மையாக்கம் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதி திகதிக்கு களஞ்சியத்தில் நிலவிய கிரயம் ரூபா 580,250 ஆன 211 நீர்மாணிகள் இறுதி இருப்பு மீதினுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது செம்மையாக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | இறுதி இருப்பு பெறுமதியை சரியாக நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டினுள் கல்ரோல் வாடகை அடிப்படையின் மீது வழங்குவதன் மூலம் ஈட்டிய ரூபா 60,182 ஆன வாடகை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவிலலை. | தவறுதலாக கணக்கீடு செய்தல் விடுபட்டுள்ளதால் எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிக்காக கணக்காய்வு கட்டணத்திற்கு ஒதுக்கீடு | எதிர்வரும் நிதிக்கூற்றுக்களை | பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு |

| | | |
|---|---|---|
| செய்திருக்கவில்லை. | தயாரிக்கும் போது கணக்காய்வு கட்டணத்தை ஒதுக்கீடு செய்து நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதாக. | அதற்காக ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 13,544,809 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 9,004,505 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 3,886,627 ஆன 2551 நிலுவை வீதவரி அலகினுள் 58 அரச விதவரி அலகுகள் மற்றும் 2493 தனியார் அலகுகளிலிற்குரியதாக முறையே ரூபா 280,983 மற்றும் ரூபா 3,605,644 நிலுவையாக காணப்பட்டன. நிலுவை தொகையை அறவிடுவதற்காக மாதாந்த தவணையாக செலுத்துவதற்கு சந்தர்ப்பங்கள் வழங்குதல், பாரிய அளவில் உள்ள மீதிகளுக்கு சிவப்பு கட்டளை அனுப்புதல் மேற்கொண்டிருந்த போதும், முன் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. | நிலுவை வீதவரி செலுத்துவதற்காக சலுகை காலமொன்றை வழங்கியுள்ளதாவும், அக் காலஎல்லை 2022 ஒக்தோபருடன் முடிவடைந்தவுடனே பணம் செலுத்தாத அனைவருக்கும் உரிய ஆதனத் தடை செய்யும் நடவடிக்கையை செயற்படுத்துவதாக. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மாதம்பே 24 மின் சந்தை கடையறைகள் மற்றும் 05 களஞ்சிய அறைகளை உடன்படிக்கையின்றி மற்றும் பாதுகாப்பு வைப்பொன்றை பெற்றுக் கொள்ளாது 2021 ஏப்ரல் மாதம் 21 திகதி சபை தீர்மானமின்றி குத்தகை வழங்கப்பட்டுள்ளன. இந்த மீன்கடைகளிற்கு முன்னால் பிரதான பாதையிலுள்ள அனுமதியற்ற மீன் கடைகளை அகற்றித்தருமாறு மீன்கடை குத்தகையாளர்கள் பிரதேச சபையிடம் கோரியிருந்த போதும், அந்த அனுமதியற்ற வியாபார | தவிசாளர் எடுத்த தீர்மானமொன்றின் மீது டெண்டர் செய்யாது ஆண்டு குத்ததை அடிப்படையில் வழங்கியதாகவும், பொது மக்கள் முறைப்பாட்டின் மீது உடன்படிக்கை செய்யாது விரைவில் திறக்க வேண்டி ஏற்பட்டதாகவும், கட்டிடத்தின் பிரச்சினைக்காக தீர்வு கிடைக்காததன் மீது நிலுவை தொகை அதிகரித்து செல்வதாக மற்றும் நிலுவை | உடன்படிக்கை செய்யாத கடையறைகளிற்காக விரைவில் உடன்படிக்கை செய்ய வேண்டியதுடன், காணப்படும் பிரச்சினையை விரைவில் தீர்த்து நிலுவை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| நிலையங்களை அகற்ற பிரதேச சபை சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக குத்தவையாளர்களினால் மேற்குறிப்பிட்ட 29 கடையறைகளிற்குரிய 2021 ஏப்ரல் முதல் நிலுவை குத்தகை தொகை ரூபா 1,241,200 செலுத்தலை புறக்கணிததிருந்ததுடன், அந் நிலுவை குத்தகை தொகையை அறவிட பிரதேச சபைக்கு இயலாதிருந்தது. | அறவிட நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபையினால் றக்வான பிரதேசத்தில் செயற்படுத்தும் 02 நீர் கருத்திட்டங்களின் நீர் வழங்கலிற்காக நீர் மாணிகளை பொறுத்துவதற்கு 2016 திசெம்பர் 30 திகதி சபை நிதியத்தினால் ரூபா 742,500 செலவில் 270 நீர் மாணிகளை கொள்வனவு செய்திருந்த போதும், கணக்காய்வு திகதிய 2022 பெப்ரவரி 02 திகதி வரையும் 59 நீர் மாணிகள் மாத்திரம் பொறுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் நீர் வழங்களிற்காக நீர் மாணிகளை பொறுத்தி அதன் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தும் சபையின் பங்களிப்பு மிகக் குறைந்த மட்டத்தில் இருப்பதாக அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் நீர் மாணிகள் கொள்வனவு செய்யப்பட்டு 06 ஆண்டுகள் கடந்திருந்த போதும், குறித்த நோக்கம் நிறைவேறியிருக்கவில்லை. | நீர் கருத்திட்டத்திற்காக சுத்திகரிப்பு அலகொன்று இல்லாமையும் நீர் குழாய்கள் அடிக்கடி குடைந்து போவதனாலும் அதனூடாக பரல் கற்கள் செல்வதால் நீர் மாணிகள் அடிக்கடி செயலிழப்பதால் நீர் மாணிகளை பொறுத்துதல் தற்போது நிருத்தப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் ஒதுக்கீட்டை வழங்கி நீர் கருத்திட்டத்தை ஒழுங்கமைத்து நீர் மாணிகளை சுமுகமாக பொறுத்த நடவடிக்கை எடுப்பதாக. | நீர் கருத்திட்ட திருத்தங்களை மேற்கொண்டு மாணிகளை பொறுத்துவதனூடாக அந் நடவடிக்கைகளை முறையாக பேணிச் கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் மீளாய்வாண்டில் 2160 மெட்ரிக் டொன் அளவான திண்மக் கழிவுகளை வெளியிடுவதற்கு 05 | 2021 ஆண்டினுள் கழவுப் பொருள் கருத்திட்டத்திற்காக உள்ளூராட்சி அமைச்சினால் ஏற்பாடு வழங்கப்பட்ட போதும், | ஒழுங்காள கழிவுப் பொருள் முகாமைத்துவ கருத்திட்டமொன்றை |

வாகனங்களுக்காக ரூபா 1,474,870 கிரயமொன்று மற்றும் 15 ஆளணி ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 6,617,808 செலவிப்பட்டிருந்தது. திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவ திட்டமொன்று காணப்பட்ட போதும், அக் கழிவுகளை வெளியிடல் முறையாக மற்றும் சூழல் நேய முறைமையின்றி பலவின்ன குப்பை வெளியிடும் இடத்தில் குழிகள் வெட்டி அதனுள் கழவுப் பொருட்களை வெளியிடுவதன் மூலம் பல சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்பட்டிருந்தன.

மதிப்பிட்ட தொகையை விட பொருட்கள் சேவைகளின் விலைகள் அதிகரித்ததால் நிர்மாணங்களை மேற்கொள்வதை ஒப்பந்ததாரர் நிறாகரித்துள்ளதாக.

திட்டமிட்டு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.